மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் 614-ம் எண்ணுள்ள வினாவின் மீது ஒரு துணைக் கேள்வி கேட்கும்போது, ரூரல் என்ஜினியரிங் சர்வே ஸ்கீமிற்கு மத்திய அரசிலிருந்து ஏதாவது உதவி கிடைக்குமா என்று கேட்டார்கள். அதற்கு தனிக் கேள்வி வேண்டும் என்று நான் விடையளித்தனே். என்னிடமுள்ள தகவல், முழு மானியமும் மத்திய அரசே தருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Supply of coal for Cement Industry

* 618 Q.—THIRU N. K. PALANISAMY:
THIRU R. R. MUNUSAMI: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether this Government have requested the Central Government to ensure regular supply of coal to the Cement Factories in this State ; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) நிலக்கரி வழங்குதல் சம்மந்தமாகவும், நிலக்கரி இருப்பு வேகமாகக் குறைந்து வருவதாலும் சிமெட்டித் தொழிலுக்கு ஏற்பட்டுள்ள பெரும் பிரச்சினை குறித்து 1973 ஜூலையில் இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டது. இம்மாநிலத்திலுள்ள சிமெட்டித் தொழிலுக்குத் தேவையான நிலக்கரி வழங்க நடவடிக்கைகள் எடுக்குமாறு இந்திய அரசு கேட்டுக்கொள்ளப்பட்டது.

திரு. என். கே. பழனிசாமி : நமக்குத் தேவையான நிலக்கரி எவ்வளவு? எவ்வளவு நமக்கு ஒதுக்கப்படுகிறது? பற்றுக்குறை எவ்வளவு இருக்கும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அகில இந்திய அளவில்தான் இது தீர்மானிக்கப்படுகிறது. நம் சிமென்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் நார்மல் கன்ஸம்ஷன் இவ்வளவு என்று இருக்கிறது. இதில் மத்திய அரசு நிலக்கரி ஒதுக்கும்போது சிமென்ட் தொழிற்சாலைகளுக்காக தேவையான நிலக்கரியை ஒதுக்கவேண்டும். அதை எடுத்து இங்கே கொண்டுவரக்கூடிய டிரான்ஸ்போர்ட் பெஸிலிட்டீஸ் கொடுக்க

வேண்டும். அப்படிக் கொடுக்காவிட்டால், சிமெண்ட் தொழிற்சாலைகளை மூடுகிற ஒரு அபாயம் ஏற்படும். சில நாட்களுக்கு முன்னால் கூட மறுபடியும் மத்திய அரசுக்குத் தெரிவக்கப்பட்டிருக்கிறது. நிலக்கரியைப் பொறுத்தளவிற்கு ஒரு திட்டவட்டமான கொள்கையை மத்திய அரசு எடுக்கவேண்டுமென்று வலியுறுத்தி வருகிறோம்.

திரு. ரா. ரா. முனுசாமி : இந்திய அரசு நிலக்கரி ஒதுக்கும்போது எல்லா மாநிலங்களையும் விட தமிழக மாநிலத்திற்குக் குறைவாக ஒதுக்கப்படுவதாகச் சொல்லப்படுகிறதே, அதற்குக் காரணம் என்ன என்று அரசு உணருகிறதா? இல்லை, தமிழகத்தை திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆள்வதால் புறக்கணிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பொதுவாக நாட்டில் நிலக்கரிப் பிரச்னை இருக்கிறது. மத்திய அரசுக்குச் சொந்தமான ரெயில்கள் கூட நிலக்கரி இல்லாமல் நின்று போனதை உறுப்பினர் அவர்கள் பத்திரிகையில் பார்த்திருக்கலாம். சிமெண்ட் உற்பத்தியைப் பொறுத்தளவிற்கு நாம் அதை அதிகமாக உற்பத்தி செய்கிறோம் நம் மாநிலத்தில். உற்பத்தி தடைபடாமல் பாதுகாப்பது மத்திய அரசின் கடமையாகும். அதையும் நாம் வலியுறுத்தி வருகிறோம்.

திரு. கு. காமாட்சி : நிலக்கரிப் பற்றாக்குறை காரணமாக இம்மாநிலத்தில் உள்ள சில சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்படலாம் என்ற செய்தி பரவலாக அடிபடுகிறது. பத்திரிகைகளில் கூட செய்தி வந்திருக்கிறது. ஆகவே இதைப் பற்றி அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன? சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்படாமல் இருப்பதற்கு அரசாங்கம் உத்தரவாதம் அளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம் தமிழகத்தில் உள்ள ஏழு சிமெண்ட் தொழிற்சாலைகளில் 2, 3, 4, 5 நாட்கள் என்றளவிற்குத் தான் நிலக்கரி இன்றைக்கு இருப்பு இருக்கிறது. இந்த நிலை தொடருமானால் சிமெண்ட் தொழிற்சாலைகள் மூடப்படவேண்டிய நிலைமை ஏற்படும் என்று மத்திய அரசுக்கு நாம் தகவல் அனுப்பியிருக்கிறோம். மத்திய அமைச்சர் அவர்கள் இதில் தலையிட்டு உடனடியாக நிலக்கரி அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும்

என்றும் கூறியிருக்கிறோம். பொதுவாக நிலக்கரிப் பிரச்னையைப் பொறுத்தளவிற்கு சுரங்க இலாகாவைக் கேட்டால் எங்களிடம் நிலக்கரி இருக்கிறது, ஆனால் அனுப்புவதற்கு வாகன்ஸ் இல்லை என்று ரெயில்வே இலாகாவைச் சொல்கிறார்கள். ரெயில்வே இலாகாவைக் கேட்டால் எங்களிடத்தில் வாகன்ஸ் இருக்கின்றன, ஆனால் சுரங்கத்திற்குச் சென்றால் சுரங்கத்தில் நிலக்கரி கொடுக்க மாட்டேன் என்கிறார்கள் என்று இப்படி முரண்பட்ட தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன. மத்திய அமைச்சர் அவர்களிடம் இந்த முரண்பட்ட நிலைமையை நானே எடுத்து விளக்கி இதில் உடனடியாகக் கவனம் செலுத்தவேண்டுமென்று சொல்லி யிருக்கிறேன்.

திரு. கே. ஏ. வகாப் : மத்திய அரசு ஒதுக்குகிற நிலக்கரி நமக்கு வந்து சேருவதற்கு டிரான்ஸ்போர்ட் சிரமங்கள் அதிகமிருப்பதாகக் கூறினார்கள். ரெயில்வே வாகன்ஸ் இல்லை என்றும் எடுத்துக் கூறினார்கள். ஆகவே நாம் நம் அதிகாரி ஒருவரை நேரடியாக அங்கு அனுப்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வதோடு நிலக்கரியைக் கொண்டுவர தமிழக அரசு ஒரு தனிக் கப்பல் வாங்குவது அரசு யோசனையில் இருப்பதாக பத்திரிகைகளில் செய்தி வந்ததே, அப்படி வாங்கப்பட்டுள்ளதா ? அல்லது வாங்கும் யோசனை உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அது வேறு பிரச்னை. அதுபற்றி ஏற்கனவே இந்த மன்றத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. இப்போது நம் முன்னுள்ள பிரச்னை நிலக்கரி வழங்குவதில், மாநிலந்தோறும் வழங்குவதில், ஒரு சிறப்பான கொள்கையைப் பின்பற்றுவதற்கு முன்வரவேண்டும். நம் எண்ணூர் தொழிற்சாலையில், மின் உற்பத்தித் தொழிற்சாலையில் நிலக்கரி இல்லை என்பதுபற்றி பெரிதாகப் பேசப்பட்டது. மத்திய அரசுக்குச் சொந்தமான ரெயில்களே நிலக்கரி இல்லாது நிறுத்தப்பட்டன. இப்போது சிமெண்ட் தொழிற் சாலைகளுக்கு அந்த ஆபத்து வந்திருக்கிறது. இந்த மூன்றையும் ஒப்பிட்டுப்பார்க்கும்போது நிலக்கரி வழங்குகிற முறையில் ஒரு சீரான கொள்கை வகுக்கப்பட வேண்டிய அவசியத்தை அது எடுத்துக்காட்டுகிறது.